(இ) கோரிக்கை எண் 40—பாசனம் (பொதுப் பணித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை) வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,814,85,51,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19–3–2020), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

135. மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2020 மார்ச் 18]

136. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கம், 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

137. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய மக்கள் சாசனம், 2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

138. மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

139. பொதுப் பணித் துறை (கட்டடங்கள்) பற்றிய திட்டச் சாதனை, 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

140. பொதுப் பணித் துறை (கட்டடங்கள்) பற்றிய மக்கள் சாசனம், 2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

141. மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

142. பொதுப் பணித் துறை (நீர்வள ஆதாரத் துறை) பற்றிய திட்டச் சாதனை, 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

143. பொதுப் பணித் துறை (நீர்வள ஆதாரத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

144. "மீன் வளத் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

145. "தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

146. "கால்நடை பராமரிப்புத் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல்கள். (தமிழ்)

147. "தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

148. மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மீன் வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

149. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மீன் வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

150. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

— — — — —